மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.எம்.சுனில்ராஜா, பி.ஏ.எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ம் நாள் செவ்வாய் கிழமை
எம்.பி.எண்.14/2024
(இன்)
சி.சி.எண்.126/2014

----

சின்னத்துரை என்ற சிவகுமார் வயது 30/13
த/பெ சாமி ....மனுதாரர்/எதிரி

/எதிர்/

தமிழக அரசுக்காக காவல் ஆய்வாளர்,
தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலையம்,
கா.நி.குற்ற எண்.13/2013
இ.த.ச பிரிவு 498(A), 294(b), 506(i),
r/w 109 IPC, and 4 of DP Act .... குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வே.ஆதி பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் திரு.ஆர்.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும் வரப்பெற்ற இம்மனுவில் இருதரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் ஆவணங்களை பரிசிலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இந்த மனுவானது கு.வி.மு.ச பிரிவு 437 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

1.1. மனுதாரர்/எதிரி கடந்த 19.08.2024 ம் தேதி முதல் 08.10.024 வரை மொத்தம் 51 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மேற்படி எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மனுதாரர்/எதிரி இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்நனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார் எனவும், மேலும் ஜாமீன்தார்களை ஆஜர்படுத்த தயாராக உள்ளார் எனவும், எனவே மேற்படி எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **எதிர்மனுதாரர் தரப்பு பதிலுரையின் சுருக்கம்**

2.1. வழக்கின் எதிரியான சின்னத்துரை என்பவரை பிணையில் விட்டால் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக் கூடும் என்பதாலும், மேலும் சாட்சிகளை கலைக்க கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விட ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. **<u>இந்நிலையில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா?</u>**

3.1. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கானது கடந்த 17.03.2013 ஆம் ஆண்டு 1வது எதிரி சின்னத்துரை, 2வது எதிரி சமீனா, 3வது எதிரி சாமி, 4வது எதிரி காளியம்மாள் மற்றும் 5வது எதிரி கருப்பாயி ஆகிய எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 498A, 294(b), 506(i) உ/இ 109 மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு இந்த நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு CC No.126/2014 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 498A, 294(b), 506(i) உ/இ 109 மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

3.2. மேலும் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது 3வது எதிரி சாமி என்பவர் இறந்து விட்டதால் அவருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டுகள் அற்றுவிட்டதாக உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முடிவுற்ற பின்னர் எதிரிகளிடம் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 313(1)(பி)ன் கீழாக விசாரணை செய்யப்பட்டு அவர்களின் விளக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தற்போது வரை பதிவு செய்யப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் எதிரிகளின் விளக்கங்கள் ஆகியவற்றின் படி காணும்போது இந்த வழக்கின் 1வது எதிரி சின்னத்துரை என்பவர் வழக்கின் புகார்தாரரான தங்கம் என்பவரை திருமணம் செய்து இரண்டு குழந்தைகள் பிறந்த நிலையில், 2வது எதிரியான சமீனா என்பவரை 2வதாக திருமணம் செய்து அவர் மூலமாகவும் குழந்தைகள் பிறந்துள்ளது.

3.3. மேற்படி 2வது எதிரியின் உண்மையான பெயர் பைஜு என்றும், சமீனா இல்லை என்றும் அவர் நீதிமன்றத்தில் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். மேலும்

அவரது ஆதார் அட்டை மற்றும் இரண்டு குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களிலும் முதல் எதிரி சின்னதுரை என்பவர் தான் 2 வது எதிரியான சமீனா என்ற பைஜூ என்பவரை திருமணம் செய்து குழந்தைகள் பிறந்துள்ளது என்பது தெரிகிறது.

3.4. மேலும் இந்த வழக்கு விசாரணையில் இருந்தபோது கடந்த 19.08.2024 அன்று 2 வது எதிரியின் பெயர் மற்றும் அடையாளம் குறித்து குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313(1)(a) இன் கீழ் விசாரணை செய்தபோது அவர் தெரிவித்துள்ள விளக்கத்தில் 2 வது எதிரியின் பெயர் சமீனா இல்லை என்றும், அவரது உண்மையான பெயர் பைஜூ என்றும், ஆனால் இந்த வழக்கில் முதல் எதிரி சின்னதுரை தான் சமீனா என்ற பெயரிலேயே கையொப்பம் செய்ய சொன்னதாகவும், மேற்படி முதல் எதிரி சின்னதுரை, 2 வது எதிரியான சமீனா என்ற பைஜூவை சென்னையில் மலைக்கோவிலில் கூட்டி சென்று திருமணம் செய்ததாக திருமண பதிவு சான்றிதழையும், அதன் பின்னர் இரண்டு குழந்தைகள் பிறந்ததற்கான பிறப்புச் சான்றிதழ்களையும் தாக்கல் செய்துள்ளார். மேலும் சின்னதுரை 2 வது எதிரியான சமீனா என்ற பைஜுவை கொடுமைகள் பல செய்து அடி உதை என பல நாள் அடித்துள்ளதாகவும், குடித்துக் கொண்டு இரவு 12.00 மணிக்கு கூட பிள்ளைகளை அடிக்கிறார் என்றும், அதனால் தூங்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார்.

3.5. மேற்படி இந்த வழக்கில் உள்ள சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் தற்போது எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 494 இன் கீழான குற்றத்திற்கு உரிய முகாந்திரம் உள்ளதாக தெரிய வந்ததால் மேற்படி குற்றம் குறித்து இருதரப்பிலும் கேட்பதற்காக வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் அரசுதரப்பில் மேல் விசாரணைக்காக கு.வி.மு.ச பிரிவு 173(8)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.6. ஆகவே, தற்போதைய நிலையில் இந்த வழக்கு விசாரணை நிலையில் உள்ளதால், முதல் எதிரி சின்னதுரை என்பவரால் அச்சுறுத்துதல் மற்றும் ஆபத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் முதல் எதிரியான சின்னத்துரை என்பவரை பிணையில் விட்டால் அவரால் இந்த வழக்கின் சாட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படும்

மற்றும் அச்சுறுத்தல் உள்ளது என்பதால் இந்த நீதிமன்றம் கடந்த 19.08.2024 அன்று மேற்படி முதல் எதிரி சின்னத்துரை என்பவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளது.

3.7. தற்போது மேற்படி வழக்கு விசாரணை நிலையில் உள்ளதால் மேற்படி சின்னத்துரை என்பவரை பிணையில் விடுவித்தால் இந்த வழக்கின் சாட்சிகளுக்கும், 2 வது எதிரிக்கும் அவரது குழந்தைகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளதால் எதிரியால் இந்த வழக்கு விசாரணைகள் பாதிக்கும் நிலை உள்ளது தெளிவாக தெரிகிறது. மேலும் இந்த எதிரி ஏற்கனவே மூன்று முறை வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் எதிரிக்கு எதிராக பிடிக் கட்டளை (NBW) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3.8. எனவே, முதல் எதிரியால், சாட்சிகளுக்கும், 2 வது எதிரிக்கும் அச்சுறுத்தல் உள்ளதாலும், எதிரிக்குப் பிணை வழங்கினால் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக மாட்டார் என்பதாலும், மேற்படி முதல் எதிரிக்கு பிணை வழங்க வேண்டியது இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே மேற்படி காரணங்களின் அடிப்படையில் முதல் எதிரி தாக்கல் செய்துள்ள இந்த பிணை மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

SUNIL RAJA MAHALINGAM
Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.10.08 11:57:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை